# ஆலுக்குறும்பர் மொழியின் பதிலீடு பெயர்

# Pathilidu peyar in Alukurumbar's Language

**முனைவர் இர.விஸ்வநாதன்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சேரன் கலை அறிவியல் கல்லூரி, காங்கேயம் – 630701

**Dr R Viswanathan,** Assistant Professor, Department of Tamil, Cheran College of Arts and Science, Kangayam - 630701

**DOI : 10.5281/zenodo.7494274**

**Abstract**

Alukurumba people live only in the Western Ghats of Nilgiri district. There are only about 1500 people of this race. Their language is on the endangered list. Linguists state that the language of these people is a dialect of Kannada. They are speaking Alukrumbar language in their house. Linguists have mentioned only a few elements about language in the absence of written case in their books. It is said that when man appeared, language also appeared. The purpose of this article is to analyze and explain the names of the victims in the language of Alukuramba.

**முன்னுரை**

நீலகிரி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மட்டுமே ஆலுக்குறும்பர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வினத்தவர் ஏறக்குறைய 1500 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுடைய மொழி அழிந்து வரக்கூடிய பட்டியலில் உள்ளது. இம்மக்களின் மொழி கன்னடத்தின் கிளைமொழி என்று மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் தங்களுடைய வீட்டில் ஆலுக்குறும்பர் மொழியினை பேசி வருகின்றனர். எழுத்து வழக்கு இல்லாது மொழியினைப் பற்றி மொழியியல் அறிஞர்கள் சில கூறுகளை மட்டுமே தங்களுடைய நூல்களில் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதன் எப்பொழுது தோன்றினானோ அப்போதே மொழியும் தோன்றியது என்பர். ஆலுக்குறும்பரின் மொழியில் உள்ள பதிலிடு பெயர்களை ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**Keywords:** நீலகிரி, பழங்குடி, ஆலுக்குறும்பர், இலக்கணம், சொல் இலக்கணம், வினைப்பெயர்

**பதிலிடு பெயர்கள்**

ஒரு பொருளை நேரடியாகக் குறிக்கும் வகையில் அமைந்த பெயர்கள் மிகப்பலவாக எல்லா மொழிகளிலும் உள்ளன. ஆனால், நேரடியாகக் குறிக்கும் பெயராக அமையாமல் அப்பெயருக்குப் பதிலாக மாற்றாக நின்று அப்பொருளை உணர்த்துவதற்கு வழங்கும் பெயரை மொழியியலார் பதிலிடு பெயர் என்று குறிப்பிடுகின்றனர். இம்மாற்றுப் பெயர்கள் மிகச் சிலவாகவே எந்த ஒரு மொழியிலும் உள்ளன.

மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், வினாப் பெயர்கள் ஆகிய மூன்றும் பதிலிடு பெயர்கள் என்று மொழியியலாளரால் கூறப்படுகின்றன. பதிலிடு பெயர்கள் அனைத்தும் வடிவில் சிறியனவாகவும் மக்கள் நாவில் நாளும் நடமாடும் இயல்புடையனவாகவும் உள்ளன. பதிலிடு பெயர்கள் காலம்பல கடந்து நிலை பெறும் பேறு உடையன. பொதுவாக, பதிலிடு பெயர்கள் மாற்றத்திற்கு உள்ளாவதில்லை. பதிலிடு பெயர்கள் மொழியின் அடிப்படைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. ஒரு மொழியின் வரலாற்றில் இவை முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

**பதிலிடு பெயர் வரும் இடங்கள்**

பெயருக்கோ பெயர்த் தொடருக்கோ சொற்றொடருக்கோ சொற்றொடரின் ஒரு பகுதிக்கோ பதிலாக இது வரும்.

**1. மூவிடப் பெயர்கள்**

மொழிகளின் உறவிலும் மொழியினங்களின் தொடர்பை விளக்கும் வகையிலும் மூவிடப் பெயர்கள் சிறந்து நிற்கின்றன. மூவிடப் பெயர்கள் தன்மை இடப் பெயர், முன்னிலை இடப்பெயர், படர்க்கை இடப்பெயர் என மூவகைப்படும். பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளுடன் சேரும்போது அப்பெயர்ச் சொற்களின் வடிவம் திரிவதில்லை. ஆனால் மூவிடப்பெயர்களோடு வேற்றுமை உருபுகள் சேரும்போது அப்பெயர்களின் வடிவம் திரியும். அதாவது நெடுமுதல் குறுகும். இவ்வாறு திரியும் வடிவத்தை உருபு ஏற்கத் திரிந்த பெயர் என்பர். உருபு ஏலா நிலையில் உள்ள எழுவாய் வடிவத்தை உருபு ஏற்காத பெயர் என்று மொழியியலாளர் குறிப்பிடுவர்.

மூவிடப் பெயர்களில் பாலை அறிய முடியாது. ஆனால், ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை அறியமுடியும். சுட்டுப்பெயரில் பால், எண் ஆகியவற்றை அறிய முடியும்.

**தன்மை**

நா (நான்)

நங்க (நாங்கள், நாம்)

இவை முறையே உருபு ஏற்கத் திரிந்த வடிவமாக

என்ன (என்)

எங்க (எங்கள்)

நங்க (நம்)

என்று மாற்றம் பெறுகின்றன.

**முன்னிலை**

நீ (நீ)

நிங்க (நீங்கள்)

இவை முறையே உருபு ஏற்கத் திரிந்த வடிவமாக

நின் (உன்)

நிங்க (உங்க)

என்று மாற்றம் பெறுகின்றன.

**படர்க்கை**

தான், தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்களுக்கு இணையான பெயர்கள் ஆ.கு மொழியில் இல்லை.

**1. சுட்டுப் பெயர்கள்**

பதிலிடு பெயர்களில் இரண்டாவது வகை சுட்டுப் பெயர்கள் ஆகும். அ, இ ஆகிய இரு உயிர்கள் சுட்டுப் பொருளில் வரும். எனவே இவற்றை சுட்டெழுத்து என்பர்.

அகரம் சேய்மையில் உள்ளதையும் இகரம் அண்மையில் உள்ளதையும் சுட்டும்.

அவா (அவன்) இதில் வா என்பதில் மூக்கொலிச் சாயல் இடம் பெறுகிறது.

அவா (அவள்) இதில் வா என்பது இடையின ஒலியாகவே அமைகின்றது.

அவரு (அவர்கள்)

அது (அது)

அஃறிணையில் வரும் பன்மையில் சுட்டுப்பெயர்கள் இல்லை. இத்தகைய சுட்டடியைக் கொண்டு பிறக்கும் பெயர்களில் எண்ணையும் பாலையும் அறிய இயலும்.

**3.வினாப்பெயர்கள்**

வினாப்பெயர்கள் சுட்டுப் பெயர்களைப் போலவே ஒருமை, பன்மை என்னும் எண் வேறுபாடும் பால் வேறுபாடும் காட்டுவன.

எவா? (எவன்?) வகரம் மூக்கொலிச் சாயலோடு ஒலிக்கப்பெறுகிறது.

எவா? (எவள்?)

ஆரா? (யார்?)

எது? (எது?)

ஏனா? (என்ன?)

**பதிலிடு பெயர்களின் வகைப்பாடு**

மூவகைப் பதிலிடு பெயர்களை அவை வழங்கும் முறை நோக்கி ஒன்பது வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள்
2. வினாப் பதிலிடு பெயர்கள்
3. வரையறை இல்லாப் பதிலிடு பெயர்கள்
4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்
5. பகிர்வுப் பதிலிடு பெயர்கள்
6. தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்
7. பரிமாற்றப் பதிலிடு பெயர்கள்
8. முழுமைப் பதிலிடு பெயர்கள்
9. உடைமைப் பதிலிடு பெயர்கள்

**1.உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள்**

அவரு (அவர், அவர்கள்)

நிங்க (நீங்கள்)

**2. வினாப் பதிலிடு பெயர்கள்**

இவை பால் காட்டாமல் எண், அளவு போன்றவற்றைக் குறிக்கும். ஏசுகு (எத்தனை, எவ்வளவு, எத்துணை)

**3. வரையறை இல்லாப் பதிலிடு பெயர்கள்**

ஒருவரை அல்லது ஒன்றை முறையே யார் என்றோ அல்லது எது என்றோ வரையறை செய்ய முடியாத நிலையில் இத்தகைய பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆரவோ (யாரோ)

ஆரனவோ (யாரையோ)

ஆரகோ (யாருக்கோ)

எதுனவோ (எதையோ)

ஏனனவோ (என்னவோ)

**4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்**

எல்லோரையும் அல்லது எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கூறும் பதிலிடு பெயர்கள் உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் எனப்படும். யார், எவன், எவள், எவர், எது போன்ற வினாப் பெயர்களுடன் உம் சேர்த்து வரும்போது இத்தகைய உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் உருவாகின்றன. பொதுவாக இப்பெயர்கள் அதிகமாக வருகின்றன.

ஆரவு (யாரும்)

எவனுவு (எவனும்)

எவவு (எவளும்)

ஆரவு (எவரும்)

எதுனவு (எதுவும்)

**5. பகிர்வுப் பதிலிடு பெயர்கள்**

இவை தனித்தனியாக ஒருவரை அல்லது ஒன்றனைக் குறித்து வரும் பதிலிடு பெயர்கள் ஆகும்.

ஒப்பொப்ப (ஒவ்வொருவராக)

ஒந்தொந்த (ஒவ்வொன்றாக)

ஒவ்வொந்துனவு (ஒவ்வொன்றையும்)

**6. தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்**

ஒரு தொடரில் ஒரு செயலைச் செய்பவனும் செய்யயப்படுபவனும் ஒருவராக இருக்கும் போது, செய்யப்படுபவனைக் குறிப்பதற்குக் குறிப்பிட்ட பதிலிடு பெயர்களைப் பயன்படுத்துவது உண்டு. அப்பதிலிடு பெயர்களைத் தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் என்பர். பொதுவாக செய்பவன்

எழுவாயாக வரும்போதுதான் தற்சுட்டுப் பெயர்கள் செயப்படு பொருளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஐம்பால் காட்டும் சுட்டுப் பெயர்கள், பெயர்ச் சொற்கள் ஆகியவற்றை அடுத்து தன்னை, தம்மை, தங்களை என்பனவும் தன்மை இடப்பெயர்களை அடுத்து என்னை, எங்களை என்பனவும் முன்னிலை இடப்பெயர்களை அடுத்து உன்னை, உங்களை என்பனவும் தற்சுட்டுப் பெயர்களாக வரும்.

எ.கா

| | |
|---|---|
| தன்னனா | (தன்னை) |
| என்னனா | (என்னை) |
| எங்கனா | (எங்களை) |
| நின்னனா | (உன்னை) |
| நிங்கனா | (உங்களை) |

**7. பரிமாற்றப் பதிலிடு பெயர்கள்**

இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள் தம்முள் பரிமாற்றம் செய்து கொண்ட செயல்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பதிலிடு பெயர்கள் பரிமாற்றப் பதிலிடு பெயர்கள் எனப்படும். இது எப்போதும் பன்மையிலேயே வரும்.

| | |
|---|---|
| தங்கவகே | (தங்களுக்குள்) |
| ஒப்பனா ஒப்பா | (ஒருவரை ஒருவர்) |
| ஒப்பகு ஒப்பா | (ஒருவருக்கு ஒருவர்) |

**8. முழுமைப் பதிலிடு பெயர்கள்**

முழுமையைக் குறித்து வரும் பதிலிடு பெயர்கள் முழுமைப் பதிலிடு பெயர்கள் எனப்படும்.

| | |
|---|---|
| எல்லாருவு | (எல்லாரும், அனைவரும்) |
| எல்லா | (எல்லாம், அனைத்தும்) |

**9. உடைமைப்பதிலிடு பெயர்கள்**

உடைமையைக் காட்டும் பதிலிடு பெயர்கள் உடைமைப் பதிலிடு பெயர்கள் எனப்படும். பல்வேறு பதிலிடு பெயர்களுடன் உடைய என்ற சொல் இணைய அதனுடன் அது, அவை, அவன், அவள், அவர் போன்ற பெயர்களை இணைக்கும் பொழுது உடைமைப் பதிலிடு பெயர்கள் உருவாகின்றன.

| | |
|---|---|
| என்னத்து | (என்னுடையது) |
| நின்னத்து | (உன்னுடையது) |
| அவத்து | (அவனுடையது) |
| நங்கத்து | (நம்முடையது) |
| அவருத்து | (அவர்களுடையது) |
| அவத்து | (அவளுடையது) |
| எங்கத்து | (எங்களுடையது) |

நிங்கத்து (உங்களுடையது)

**முடிவுரை**

நீலகிரி வாழ் மக்களில் நீண்ட பாரம்பரியம் மற்றும் தனித்த பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ள ஆலுக்குறும்பர் மக்கள், தங்களுக்கான தகவல் பரிமாற்றத்தில் தமிழ் மொழியோடு தங்களின் இனக்குழு மொழியையும் பேசுகின்றர். மொழியியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி இம்மொழியின் தன்மையானது கன்னட மொழியைச் சார்ந்திருப்பினும், அதில் காணப்படும் இலக்கணக் கூறுகளானது தமிழ் மொழியில் உள்ள இலக்கணக்கூறுகளை தனக்குள் கொண்டிருக்கிறது. மேலும் இம்மக்களின் மொழிக்கென எழுத்துருக்களை உருவாக்கி இம்மொழி சிதைந்து போகாமல் காப்பதும் மொழியியல் ஆய்வாளர்களின் கடமையாக இருக்கிறது. அந்த வகையில் ஆலுக்குறும்பர் மொழியில் காணப்படும் ஒரு பொருளை நேரடியாகக் குறிக்கும் வகையில் அமைந்த பெயர்கள் மிகப்பலவாக இம்மொழிகளிலும் காணப்படுவதை அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. அகத்தியலிங்கம்.ச, தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். 2011.
2. கருணாகரன்.கீ, மொழியியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2012.
3. நுஃமான்.எம்.ஏ, அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம் பதிப்பகம், திருச்சி.2007.
4. முத்துச்சண்முகம், இக்கால மொழியியல், முல்லை நிலையம், சென்னை.2005.

## Reference

1. Agathiyalingam.S, Thamizhmozi Amaippiyal, Meyyappan Pathippagam, Chidambaram.2011.
2. Karunakaran.K, Mozhiyiyal, NCBH, Chennai.2012.
3. Numman.M.A, Adippadai Thamizh Ilakkanam. Adaiyalam Pathippagam, Trichy.2007.
4. Muthushanmugam, Ikkala Mozhiyiyal, Mullai Nilaiyam, Chennai.2005

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் இர.விஸ்வநாதன் “ ஆலுக்குறும்பர் மொழியின் பதிலீடு பெயர்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 1-6

**Cite this Article in English**

**Dr R Viswanathan “ Pathilidu peyar in Alukurumbar's Language” Pulam**: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 1-6